# FORM-3
# MINUTES OF THE COUNCIL MEETINGS
## (See rule 5 and Serial Number 3 of Appendix - I)
## குளச்சல் நகராட்சி

குளச்சல் நகராட்சி மன்றத்தின் ஒத்திவைக்கப்பட்ட சாதாரணக்கூட்டம் 2013 மே திங்கள் 15.05.2013–ம் நாள் புதன்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு நகர்மன்ற கூட்ட அரங்கில் வைத்து நடைபெற்றது

**குளச்சல் நகராட்சி மன்றத்தில் 29.04.2013–ம் தேதிய சாதாரணக்கூட்டத்தில் ஒத்திவைக்கப்பட்ட பொருள்கள்.**

முன்னிலை:
நகர்மன்ற தலைவர்
குளச்சல் நகர்மன்றம்.

**பொருள் எண். 1**

இந்நகராட்சியின் 2012–13–ம் ஆண்டிற்கான திருத்திய வரவு செலவு மதிப்பீடு மற்றும் 2013–14–ம் ஆண்டிற்கான உத்தேச வரவு செலவு திட்ட மதிப்பீடு ஆகியவை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது

**அ.குறிப்பு** : அவசர அவசியம் கருதி இந்நகர்மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்றத் தலைவரின் முன்அனுமதி பெற்று வரவு செலவு மதிப்பீடுகளை நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருநெல்வேலி அவர்களுக்கு அனுப்பியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

(ந.க.எண்.பி1/5630/2011)

**தீர்மானம் எண்.547. அலுவலக குறிப்பு ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 2**

இந்நகராட்சிக்குட்பட்ட பெருந்தலைவர் காமராஜர் பேருந்து நிலையத்தில் அமைந்துள்ள கடை எண்.3, 4, 6, 7, 13, 15, 17, 18, 19, 20, 21, 24, 25, 27, 28, 29, 31 மற்றும் 35 ( சரஸ்வதி குழு) காந்தி ஜங்சன் ஆகிய கடைகளுக்கு 31.03.2013 –ம் மாதம் வரை உரிமம் முடிவடைவதால் 01.04.2013 முதல் 31.03.2016 வரை மூன்றாண்டுக்கு கடை வாடகை உரிமம் நீட்டிப்பு செய்தும், வாடகைத் தொகையில் இருந்து 15% உயர்வு செய்ய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண். | கடை எண். | உரிமதாரர் பெயர் | தற்போதைய வாடகை தொகை ரூ. | உயர்வு செய்யப்படும் வாடகைத் தொகை ரூ. |
|---|---|---|---|---|
| 1 | 3 | எஸ்.ஜெயமலர் | 1769 | 2034 |
| 2 | 4 | கே.நூர்முகம்மது | 2681 | 2931 |
| 3 | 6 | பி.ஷாகுல்ஹமீது | 1469 | 1689 |
| 4 | 7 | பி. முகம்மது மிக்தாத் | 1248 | 1435 |
| 5 | 13 | வி. ருத்ரபிரசாதன்தம்பி | 998 | 1148 |
| 6 | 15 | எம். ஐயப்பன் | 998 | 1148 |
| 7 | 17 | எஸ். ராஜ சார்லெட் செல்வி | 685 | 788 |
| 8 | 18 | பி. கென்னடி | 685 | 788 |
| 9 | 19 | டி. கோவிந்தராஜ் | 630 | 843 |
| 10 | 20 | எ. ஜெயசேகர் | 585 | 673 |
| 11 | 21 | ஆர். பாலன் | 606 | 697 |
| 12 | 24 | எல். வினிஸ்டர் | 661 | 760 |
| 13 | 25 | எல். வினிஸ்டர் | 661 | 760 |
| 14 | 27 | ஜே. ஆன்றனி | 642 | 738 |
| 15 | 28 | ஜே. ஆன்றனி | 585 | 673 |
| 16 | 29 | என். ஐயப்பன் | 585 | 673 |
| 17 | 31 | தீயணைப்பு ஊர்தி வாகனம்நிறுத்துமிடம் | 966 | 1116 |
| 18 | 35 | சரஸ்வதி குழு (காந்தி ஜங்சன்) | 661 | 760 |

**அ.குறிப்பு :** மேற்படி வாடகைதாரர்களின் வரியாக உரிம காலம் முடிவடைவதால் மீண்டும் மூன்றாண்டுகளுக்கு நீட்டிப்பு செய்து உரிமம் வழங்கலாம்.

(ந.க.எண்.அ2/12035/11)

**தீர்மானம் எண்.548. அலுவலக குறிப்பு ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது. உரிமம் வழங்க முடிவு செய்யப்பட்டது.**

**பொருள் எண். 3**

நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.51135/12/ஜே1 நாள் 26.02.2013–ன் படி இந்நகராட்சிக்கு துப்புரவு ஆய்வாளராக பணிமாற்றம் செய்யப்பட்ட திரு.கே.மாரிச்சாமி அவர்கள் மாறுதல் பயணப்படியாக ரூ.12,049/–ஐ வழங்க கேட்டு பயணப்பட்டியல் சமர்ப்பித்துள்ளார். எனவே மேற்படி தொகையினை அன்னாருக்கு வழங்குவதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.குறிப்பு : மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் எண்.549. அலுவலக குறிப்பு ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 4**

இந்நகராட்சி குடிநீர் லாரி TN-74 Z-5304 -க்கு தகுதிச்சான்று பெறுவதற்காக மார்த்தாண்டம் வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் செலுத்தப்பட்ட தொகை மற்றும் புகை பரிசோதனைக்காக ஸ்டிக்கர் ஒட்டிய வகையில் செலவு செய்யப்பட்ட தொகையும் சேர்த்து மொத்தம் ரூ.3100/–ஐ சம்மந்தப்பட்ட ஓட்டுநருக்கு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**தீர்மானம் எண்.550. அலுவலக குறிப்பு ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 5**

2012–13 –ம் ஆண்டிற்கு இந்நகராட்சிக்கு செலுத்த வேண்டிய சொத்துவரி, தொழில் வரி, குடிநீர் கட்டணம், குத்தகை நிலுவை, கடை வாடகை மற்றும் இதர உரிமக் கட்டணங்களை உடனடியாக செலுத்த கேட்டு இந்நகராட்சி பொதுமக்களுக்கு ஒலிபெருக்கி மூலம் 08.02.2013 முதல் 30.03.2013 வரை விளம்பரம் செய்வதற்கான உத்தேச செலவுத் தொகை ரூ.48,000/–க்கு இந்நகர்மன்ற தீர்மானம் எண்.493 நாள் 28.02.2013 மூலம் ஏற்கனவே ஒப்புதல் அளித்துள்ளது. அதன் அடிப்படையில் அவசர அவசியத்தை கருத்தில் கொண்டு நகர்மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்றத் தலைவரின் முன்அனுமதி பெற்று 08.02.2013 அன்று உள்ளூர் சவுண்ட்ஸ் நிறுவனத்திடமிருந்து நேரடியாக பெறப்பட்ட விலைப்புள்ளிகள் விபரம் பின்வருமாறு:

| வ.எண். | விலைப்புள்ளிதாரர் பெயர் | விலைப்புள்ளி விகிதம் நாள் ஒன்றுக்கு (மைக்செட், டீசல், ஆட்டோ, பெட்ரோல், ஆயில் உட்பட) |
|---|---|---|
| 1. | M/s.பிரவீன் சவுண்ட்ஸ், குளச்சல் | ரூ. 2,600/– |
| 2. | M/s.லீலா சவுண்ட்ஸ், குளச்சல் | ரூ. 2,000/– |

மேற்காணும் இரண்டு விலைப்புள்ளிகளில், M/s.லீலா சவுண்ட்ஸ், குளச்சல் நிறுவனத்தின் குறைந்த விலைப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்கப்பட்டுள்ளதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு :** (1) M/s.லீலா சவுண்ட்ஸ், குளச்சல் நிறுவனத்தின் ரூ.2,000/– க்கான குறைந்த விலைப்புள்ளியை மன்றம் ஏற்றுக் கொள்ளலாம்.

(2) அவசர அவசியத்தை கருத்தில் கொண்டு பணி உத்தரவு வழங்கியதற்கு மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.அ1/4826/2007)

**தீர்மானம் எண்.551. அலுவலக குறிப்பு ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 6**

இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு மினிலாறி TN.74.T.5508–க்கு **25.04.2013–**ல் தகுதி சான்று புதுப்பிக்க வேண்டியுள்ளதால் கீழ்கண்ட பழுதுகளை சரி செய்ய வேண்டியுள்ளது.

**<u>பணிகள் விபரம்</u>**

1) சர்வீஸ் செய்தல்
2) பெயிண்டிங் செய்தல்
3) கேபிள் டிங்கர் ஒர்க்ஸ்
4) பாடி டிங்கர் ஒர்க்ஸ்
5) கிளட்ச் சரி செய்தல்
6) பிரேக் சரி செய்தல்
7) எலக்ட்ரிக் செக்கப் செய்தல்
8) ரேடியேட்டர் ஒஸ் புதியது மாற்றுதல்
9) ஆயில் செக்கப் செய்தல்
10) நான்கு வீல்களும் கழற்றி கிரீஸ் அடித்து மாட்டுதல்

மேற்படி பழுதுகளை சரி செய்ய உத்தேச செலவு ரூ. 45,000/– க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.எச்1/2913/09)

**<u>தீர்மானம் எண்.552. அலுவலக குறிப்பு ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.</u>**

**பொருள் எண். 7**

இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு கழிவுநீர் வாய்க்கால் மற்றும் நீர் தேங்கியுள்ள இடங்களில் கொசு உற்பத்தியை தடுக்கும் பொருட்டு பயன்படுத்தப்பட்டு வரும் பேசில்லஸ் துருந்தியாசிஸ் மருந்து தற்போது இருப்பில் இல்லாத காரணத்தால் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை ஆணையத்தால் அங்கீகாரம் பெற்ற நிறுவனத்திடமிருந்து 50 Kg. மருந்து வாங்குவதற்கு உத்தேச செலவு ரூ. 60,000/– க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.எச்1/1243/13)

**<u>தீர்மானம் எண்.553. அலுவலக குறிப்பு ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.</u>**

**பொருள் எண். 8**

குளச்சல் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் சொத்துவரி மற்றும் குடிநீர் வரி நிலுவை அதிகம் இருந்த காரணத்தினால் குடிநீர் குழாய் இணைப்பு துண்டிக்கும் பணி 20.03.2013 முதல் 27.03.2013 வரை நடைபெற்றது. அதன்படி கீழ்க்கண்ட முகவரியில் உள்ளவர்களின் குடிநீர் குழாய் இணைப்பு துண்டிப்பு செய்யப்பட்டு D.C.பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டுள்ளது என்ற விபரம் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| 1 | திரு.ஜேசு அந்தோணி,<br>க.எண்.9/42.எ. மரமடி |
| 2 | திரு. சக்கரியாஸ்,<br>க.எண்.7/10, கொட்டில்பாடு. |
| 3 | திருமதி. அற்புதம் மேரி,<br>க.எண்.7/42, கொட்டில்பாடு. |
| 4 | திரு. ஜேசு அடிமை<br>க.எண்.8/38, கொட்டில்பாடு. |
| 5 | திரு. கமலியாஸ்,<br>க.எண்.9/39.சி. சாம்பசிவபுரம் |
| 6 | திருமதி. மீனாகுமாரி,<br>க.எண்.6/4 கிழக்கு கடற்கரை சாலை |
| 7 | திரு. அந்தோணி,<br>க.எண்.8/87.எ. ஜோசப் பெனடிட் காலனி |

| | |
|---|---|
| 8 | திரு.செய்யது அலி,<br>க.எண்.4/64–3, ஆசாத்நகர். |
| 9 | திரு.முஹம்மது நியாஸ்,<br>க.எண். 20/28, பள்ளிரோடு. |

**<u>அ.குறிப்பு :</u>** மன்றம் பதிவு செய்யலாம்.

(ந.க.எண்.அ1/2042/2007)

**தீர்மானம் எண்.554. அலுவலக குறிப்பு ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது. பதிவு செய்யப்பட்டது.**

**பொருள் எண். 9**

இந்நகராட்சி தினசரி சந்தைக்குள் மீன் சந்தையில் மேற்கூரை அமைக்கும் பணிக்கான மதிப்பீட்டுத் தொகை ரூ.1,80,000/– க்கு இந்நகர் மன்றம் தனது தீர்மானம் எண். 521, நாள் 25.03.2013–ன் மூலம் ஏற்கனவே ஒப்புதல் அளித்துள்ளது. அதன் அடிப்படையில் 19.04.2013 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் குறித்த விவரம் பின்வருமாறு

| | | |
|---|---|---|
| 1. | திரு.T.ஜாண் ரெக்ஸ்லின் ஜோஸ்,<br>ஒப்பந்தத்தாரர் | **0.21%** மதிப்பீட்டை விட குறைவு. |
| 2. | திரு.C.தேவகரிம் சேம்,<br>ஒப்பந்தத்தாரர் | **1.04%** மதிப்பீட்டை விட கூடுதல். |

மேற்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், மதிப்பீட்டை விட 0.21% குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.T. ஜாண் ரெக்ஸ்லின் ஜோஸ், ஒப்பந்தத்தாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அ.குறிப்பு :</u>** மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ1/935/2013)

**தீர்மானம் எண்.555. அலுவலக குறிப்பு ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 10**

இந்நகராட்சி வளாகத்தில் ஈப்பு நிறுத்துமிடம் மற்றும் அண்ணாசிலை அருகில் ரேசன் கடையில் Portico portion shed ஆகியவை அமைப்பதற்கான பணிக்கான மதிப்பீட்டுத் தொகை ரூ.70,000/– க்கு இந்நகர் மன்றம் தனது தீர்மானம் எண். 523, நாள் 25.03.2013–ன் மூலம் ஏற்கனவே ஒப்புதல் அளித்துள்ளது. அதன் அடிப்படையில் 19.04.2013 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் குறித்த விவரம் பின்வருமாறு :

| | | |
|---|---|---|
| 1. | திரு.C.தேவகரிம் சேம்,<br>ஒப்பந்தத்தாரர் | **1.98%** மதிப்பீட்டை விட கூடுதல். |
| 2. | திரு.T.ஜாண் ரெக்ஸ்லின் ஜோஸ்,<br>ஒப்பந்தத்தாரர் | **0.16%** மதிப்பீட்டை விட குறைவு. |

மேற்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், மதிப்பீட்டை விட 0.16% குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.T.ஜாண் ரெக்ஸ்லின் ஜோஸ், ஒப்பந்தத்தாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அ.குறிப்பு :</u>** மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ1/934/2013)

**தீர்மானம் எண்.556. அலுவலக குறிப்பு ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 11**

இந்நகராட்சிக்குட்பட்ட முக்கிய இடங்களில் சீராக ஒளிரும் குறியீடுகள் (Sign Boards) அமைப்பதற்கான மதிப்பீட்டுத் தொகை ரூ.70,000/– க்கு இந்நகர் மன்றம் தனது தீர்மானம் எண். 512, நாள் 25.03.2013–ன் மூலம் ஏற்கனவே ஒப்புதல் அளித்துள்ளது. அதன் அடிப்படையில் 19.04.2013 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் குறித்த விவரம் பின்வருமாறு

| | | |
|---|---|---|
| 1. | திரு.T.ஜாண் ரெக்ஸ்லின் ஜோஸ்,<br>ஒப்பந்தத்தாரர் | **0.47%** மதிப்பீட்டை விட கூடுதல். |
| 2. | திரு.C.தேவராஜ்,<br>ஒப்பந்தத்தாரர் | **0.01%** மதிப்பீட்டை விட குறைவு. |

மேற்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், மதிப்பீட்டை விட 0.01% குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.C.தேவராஜ், ஒப்பந்தத்தாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அ.குறிப்பு :</u>** மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ1/517/2013)

**தீர்மானம் எண்.557. அலுவலக குறிப்பு ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 12**

இந்நகராட்சி நகர்புற ஆரம்ப சுகாதார நிலையத்தில் கூடுதல் வசதிகள் மேற்கொள்வதற்கான மதிப்பீட்டுத் தொகை ரூ.1,75,000/– க்கு இந்நககர் மன்றம் தனது தீர்மானம் எண். 513, நாள் 25.03.2013–ன் மூலம் ஏற்கனவே ஒப்புதல் அளித்துள்ளது. அதன் அடிப்படையில் 19.04.2013 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் குறித்த விவரம் பின்வருமாறு

| | | |
|---|---|---|
| 1. | திரு.C.தேவகரிம் சேம்,<br>ஒப்பந்தத்தாரர் | **1. 24%** மதிப்பீட்டை விட கூடுதல். |
| 2. | திரு.T.ஜாண் ரெக்ஸ்லின் ஜோஸ்,<br>ஒப்பந்தத்தாரர் | **0.01 %** மதிப்பீட்டை விட குறைவு. |

மேற்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், மதிப்பீட்டை விட 0.01% குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.T.ஜாண் ரெக்ஸ்லின் ஜோஸ், ஒப்பந்தத்தாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அ.குறிப்பு :</u>** மன்றம் அனுமதி வழங்கலாம். (ந.க.எண்.இ1/934/2013)

**தீர்மானம் எண்.558. அலுவலக குறிப்பு ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 13**

இந்நகராட்சிக்குட்பட்ட கே.எஸ்.எஸ்.எஸ்.காலனி மேல்நிலை நீர்தேக்க தொட்டி, வெள்ளிப்பிள்ளையார் கோயில் சம்ப் மற்றும் பண்டாரவிளை வி.கே.பி. பள்ளி எதிரில் ஆகியவற்றின் அருகில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள ஆழ்துளை கிணறு ஆகியவற்றை இணைத்தல், போர் பிட் மற்றும் மீட்டர் பெட்டி அறை ஆகிய பணிகளுக்கான மதிப்பீட்டுத் தொகை ரூ.2,10,000/– க்கு இந்நககர் மன்றம் தனது தீர்மானம் எண். 520, நாள் 25.03.2013–ன் மூலம் ஏற்கனவே ஒப்புதல் அளித்துள்ளது. அதன் அடிப்படையில் 19.04.2013 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் குறித்த விவரம் பின்வருமாறு

| | | |
|---|---|---|
| 1. | திரு.C. சந்திரசேகர்,<br>ஒப்பந்தத்தாரர் | **0.02%** மதிப்பீட்டை விட குறைவு. |
| 2. | திரு.C.தேவகரிம் சேம்,<br>ஒப்பந்தத்தாரர் | **0.74%** மதிப்பீட்டை விட கூடுதல். |

மேற்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், மதிப்பீட்டை விட 0.02% குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.C. சந்திரசேகர், ஒப்பந்தத்தாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அ.குறிப்பு :</u>** மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ1/933/2013)

**தீர்மானம் எண்.559. அலுவலக குறிப்பு ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 14**

இந்நகராட்சிக்கு சொந்தமான கீழ்க்கண்ட 3 மினி லாறிகள் பழுதாகி இயக்க முடியாத நிலையில் உள்ளது. இதனை கழிவு செய்ய மினி லாறிகள் வாங்கப்பட்ட விவரங்களுடன் மேலாளர், தானியங்கி பணிமனை, ராணிதோட்டம் அனுப்பி வாகனத்தின் பயன்பாடு குறித்து சான்று வழங்க கேட்க மன்ற அனுமதி பெறலாம்.

| வ.எண். | வாகனத்தின் எண். | வாகனம் வாங்கிய வருடம் | இயக்க முடியாமல் நிறுத்தப்பட்ட வருடம் |
|---|---|---|---|
| 1 | TN 74 - 5507 | 1991 | 2012 |
| 2 | TN 74.Z -2339 | 1997 | 2013 |
| 3 | TN 74 - 8931 | 1999 | 2013 |

<u>**அ.குறிப்பு :**</u> மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் எண்.560. அலுவலக குறிப்பு ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 15**

நகர்மன்ற தீர்மானம் எண்.1602 நாள் 28.02.2011–ன்படி நகராட்சி பிறப்பு இறப்பு பதிவுகளை 2003 மே வரையுள்ள பதிவுகளை கணனியில் பதிவு செய்வதற்கு பதிவு 1–க்கு ரூ. 2.80 வீதம் பதிவு செய்ய யூனிக்யூ நிறுவனத்திற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது. ஆனால் நிறுவனத்தார் மொத்த பதிவுகள் 51358–ல் 25103 மட்டுமே பதிவு செய்து விட்டு மீதமுள்ள பதிவுகளை தற்போது வரை பதிவு செய்யவில்லை. எனவே மேற்படி நிறுவனத்தினருக்கு வழங்கப்பட்ட உத்தரவை ரத்து செய்யவும், பதிவுகளை கணனியில் பதிவு செய்ய பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் கீழ்க்கண்டவாறு :

| வ.எண். | நிறுவனத்தின் பெயர் | பதிவு 1–க்கு தொகை |
|---|---|---|
| 1 | ABACUS Computech | ரூ. 2.80 |
| 2 | Misbha Edwin Industrial School | 2.90 |

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ABACUS Computech நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்கவும் மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ABACUS Computech நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.எச்1/3150/2009)

**தீர்மானம் எண்.561. அலுவலக குறிப்பு ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 16**

இந்நகராட்சியின் குடிநீர் லாரி TN -74.Z 5304–ன் முன்பக்க இரு டயர்கள் மற்றும் டியூப்கள் மிக மோசமாக தேய்ந்து லாரியை இயக்க இயலாத நிலையில் உள்ளது. தற்போது நிலவும் வறட்சியின் காரணமாக குடிநீர் குறைவாக செல்லும் இடங்களுக்கு மேற்படி லாரியின் மூலம் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. எனவே அவசர அவசியம் கருதி மேற்படி லாரியின் பழுதடைந்த இரு டயர்கள் (எண்.8.25.20 ) மற்றும் டியூப்களை மாற்றி புதிய டயர்கள் மற்றும் டியூப்கள் பொருத்துவதற்கான உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ.32,000/– க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது

<u>**அ.குறிப்பு :**</u> மன்றம் அனுமதி வழங்கலாம். (ந.க.எண்.இ1/5754/2010)

**தீர்மானம் எண்.562. அலுவலக குறிப்பு ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 17**

இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு 1–ல் ஜெயபால் காம்பவுண்ட் தெருவில் அமைந்துள்ள கதவு எண்.2–4.A–க்கு சொத்துவரி விதிப்பு 2000–2001 அரையாண்டில் வரிவிதிப்புக்குட்படுத்தப்படும் போது Zone-B–ல் மதிப்பு 2.00 என்ற அடிப்படையில் அரையாண்டு தொகை ரூ.493/– நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. ஆனால் தற்போது கட்டிடம் அமைந்துள்ள பகுதி 2008–09–ம் ஆண்டு சொத்துவரி சீராய்வின் படி ஜெயபால் காம்பவுண்ட் தெருவில் Zone - C –ல் வருகிறது. ஆகவே மேற்படி கட்டிடத்தின் Zone மதிப்பை மாற்றி அமைத்து வரி நிர்ணயம் செய்ய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>**அ.குறிப்பு :**</u> மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.அ1/1161/2012)

**தீர்மானம் எண்.563. அலுவலக குறிப்பு ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண்.18**

இந்நகராட்சிக்குட்பட்ட முகைதீன் பள்ளி பகுதியில் குளச்சல் பீச்ரோடு முகப்பிலிருந்து பண்டகசாலைபுரம் வரையுள்ள வடிகால் ஓடையின் பக்க சுவர்கள் மற்றும் வடிகால் ஓடைப் பகுதிகள் உடைந்து கழிவுநீர் வெளியே செல்ல முடியாமல் தேங்கியுள்ளதால் துர்நாற்றம் வீசுவதோடு, பொதுமக்களுக்கு நோய்கள் பரவும் சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. எனவே பொது மக்கள் நலனை கருத்தில் கொண்டு மேற்படி தெருவில் வடிகால் ஓடை அமைத்து மூடு சிலாப் அமைப்பதற்கான மதிப்பீட்டுத் தொகை ரூ.6,00,000/– க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு :** மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ1/1263/2013)

**தீர்மானம் எண்.564. அலுவலக குறிப்பு ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 19**

இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் அனைத்து மக்களுக்கும் சீரான குடிநீர் வழங்க 2013–14 –ம் ஆண்டிற்கு 10 மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியிலிருந்து விநியோகம் செய்யும் குடிநீரின் கொள்ளளவை பொறுத்து கீழ்க்கண்டபடி இரண்டு மண்டலங்களாக பிரித்து அந்தந்த மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகளுக்கு ஏற்றப்பட்டு மோட்டார்கள் மற்றும் பேனல் போர்டுகள், பிரதான குழாய்களில் ஏற்படும் உடைவுகள் மற்றும் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியிலிருந்து வெளியேறும் விநியோக குழாய்களில் ஏற்படும் உடைவுகள், வால்வுகளில் ஏற்படும் பழுதுகள் ஆகியவற்றை உடனுக்குடன் சரிசெய்யும் வகையில் 2013–14–ம் ஆண்டிற்கான மொத்த பராமரிப்பு மதிப்பீட்டு தொகை ரூ. 6,00,000/– ஐ இரண்டு ஒப்பந்ததாரர்கள் மூலம் மண்டலம் வாரியாக பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள முதல் மண்டலத்திற்கு ரூ.3,50,000/– ம், இரண்டாவது மண்டலத்திற்கு ரூ. 2,50,000/–ம் தயாரிக்கப்பட்டு மன்ற ஒப்புதலுக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

**மண்டலம் – I**

| | | |
|---|---|---|
| 1 | பொட்டல் மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி (வி.கே.பி) | 2,00,000 லிட்டர் |
| 2 | பர்னட்டிவிளை மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி | 60,000 லிட்டர் |
| 3 | துறைமுகத்தெரு (கோயில் முன்னால்) “ | 1,00,0000 லிட்டர் |
| 4 | துறைமுகத்தெரு (கோயில் பின்னால்) “ | 1,00,0000 லிட்டர் |
| 5 | கொட்டில்பாடு “ | 30,000 லிட்டர் |
| 6 | சுனாமி சிங்காரவேலன் காலனி மேல்நிலைத் தொட்டி | 30,000 லிட்டர் |
| 7 | கே.எஸ்.எஸ்.எஸ்.காலனி மேல்நிலைத் தொட்டி | 3,00,0000 லிட்டர் |

**மண்டலம் – II**

| | | |
|---|---|---|
| 1 | அலுவலக மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி | 7,00,000 லிட்டர் 0 |
| 2 | மார்க்கெட் மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி | 2,00,000 லிட்டர் |
| 3 | மாதாகாலனி மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி | 3,00,0000 லிட்டர் |

**தீர்மானம் எண்.565. ஏகமனதாக ஒப்புதல் அளிக்கப்படுகிறது.**

**பொருள் எண்.20**

நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் நேர்முகக் கடிதம் எண்.44443/12/ஜே4 நாள் 14.03.2012–ல் தெரிவித்துள்ளபடி, இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் சுற்றித் திரியும் தெருநாய்களை பிடித்து கருத்தடை செய்யும் பொருட்டு, கருத்தடைக்கு முன், பின் பாதுகாப்பிற்காக, தொலைபேசி நிலைய சாலையில் கால்நடை மருத்துவமனைக்கு அருகில் புதிதாக கொட்டகை அமைத்து இரண்டு அறைகள் அமைப்பதற்கான மதிப்பீட்டுத் தொகை ரூ.68,000 /– க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு :** மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ1/856/2013)

**தீர்மானம் எண்.566. அலுவலக குறிப்பு ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண்.21**

இந்நகராட்சி பகுதிகளில் தெருவிளக்குகளுக்காக மின்மீட்டர் பொருத்தப்பட்டுள்ள பெட்டிகள் மோசமாக பழுதடைந்துள்ளதால் மழைக் காலங்களில் மின் மீட்டர்கள் நனைந்து அடிக்கடிப பழுது ஏற்பட்டு வருகிறது. மேலும் அநேக மின்கம்பங்களில் தெருவிளக்குகளை ON - OFF செய்யும் Fuse carrier –கள் பெட்டிகளுக்கு வெளியே உள்ளதால் மழைக்காலங்களில் தெருவிளக்குகளை சரிவர ON - OFF செய்ய இயலாத நிலை உள்ளது. எனவே மேற்படி பிரச்சனைகளை சரி செய்யும் பொருட்டு 70 எண்ணங்கள் மீட்டர் பெட்டிகள் வாங்குவதற்கான மதிப்பீட்டு தொகை ரூ. 1,40,000/– க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.
<u>அ.குறிப்பு :</u> மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ1/5044/2011)

**தீர்மானம் எண்.567. அலுவலக குறிப்பு ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண்.22**

இந்நகராட்சியில் உள்ள1953 ஆம் ஆண்டு முதல் 1999–ம் ஆண்டு முடியவுள்ள பிறப்பு இறப்பு பதிவேடுகள் மிகவும் மோசமான நிலையில் உள்ளதால், மேற்படி பதிவேடுகளை பைண்டிங் செய்வதற்கு உத்தேச செலவு ரூ. 48,000/– க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.
<u>அ.குறிப்பு :</u> மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.எச்1/3150/2009)

**தீர்மானம் எண்.568. அலுவலக குறிப்பு ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண்.23**
**3–வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திரு.என்.முகம்மது தாசீம் அவர்கள் கொண்டுவரும் தீர்மானம்**

குளச்சல் நகராட்சியில் 1 1/2 ஆண்டு காலமாக ஆணையாளர் பணியிடம் காலியாக உள்ளதை பொதுமக்கள் நலன் கருதி உடனே நிரப்பிட நகராட்சி நிர்வாக ஆணையாளர் அவர்களை கேட்டுக் கொள்ள மன்றம் தீர்மானிக்கலாம்.
**தீர்மானம் எண்.569. ஏகமனதாக தீர்மானிக்கப்படுகிறது.**

(ஒம்) அ.நசீர்,
நகர்மன்றத் தலைவர்
குளச்சல் நகராட்சி

(உண்மை நகல்)

ஆணையர்(பொ)
குளச்சல் நகராட்சி

# FORM-3
# MINUTES OF THE COUNCIL MEETINGS
## (See rule 5 and Serial Number 3 of Appendix - I)
## குளச்சல் நகராட்சி

**குளச்சல் நகராட்சி மன்றத்தின் அவசரக்கூட்டம் 2013 மே திங்கள் 15.05.2013–ம் நாள் புதன்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு நகர்மன்ற கூட்ட அரங்கில் வைத்து நடைபெற்றது**

முன்னிலை:
நகர்மன்ற தலைவர்
குளச்சல் நகர்மன்றம்.

**பொருள் எண். 1**

நகராட்சி நிர்வாக ஆணையாளர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.48800/2006/உ.வ.4 நாள் 11.05.2013–ன்படி, நகராட்சிகளில் பொதுப்பணி, பொறியியல் பணி, பொது சுகாதாரப் பணி, நகரமைப்பு பணி என்று பணிப் பிரிவுகள் உள்ளது போல, தமிழ் நாட்டிலுள்ள நகராட்சிகளின் நிதி மேலாண்மை மற்றும் கணக்குகளை தற்போதைய தேவைக்கேற்ப பராமரிப்பதற்காக "தமிழ் நாடு நகராட்சி கணக்குப் பணி" என்ற அமைப்பினை ஏற்படுத்தி அதற்கான பணிவிதிகளை உருவாக்கிட முடிவு செய்யப்பட்டுள்ளது. எனவே மேற்படி "தமிழ் நாடு நகராட்சி கணக்குப் பணி" என்ற அமைப்பினை குளச்சல் நகராட்சியிலும் ஏற்படுத்திட மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.
**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் எண்.570. நகராட்சிகளின் கணக்குகளை இன்றைய தேவைக்கேற்ப பராமரிக்கவும், நிதி மேலாண்மைய திறம்படுத்தவும், "தமிழ்நாடு நகராட்சி கணக்கு பணி" என்ற பணியமைப்பினை உருவாக்குவதற்கு குளச்சல் நகராட்சி மன்றம் இசைவு தெரிவித்துக்கொள்கிறது. அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்படுகிறது.**

(ஒம்) அ.நசீர்,
நகர்மன்றத் தலைவர்
குளச்சல் நகராட்சி

(உண்மை நகல்)

ஆணையர்(பொ)
குளச்சல் நகராட்சி

# குளச்சல் நகராட்சி

குளச்சல் நகராட்சி மன்றத்தின் சாதாரணக்கூட்டம் 2013 மே திங்கள் 30.05.2013–ம் நாள் வியாழக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு நகர்மன்ற கூட்ட அரங்கில் வைத்து நடைபெற்றது.

முன்னிலை:
நகர்மன்ற தலைவர்
குளச்சல் நகர்மன்றம்

**பொருள் எண்.1**

குளச்சல் நகராட்சியின் 2012–13 ஆம் ஆண்டிற்கான நிர்வாக அறிக்கை மன்றத்தின் பார்வைக்கும், ஒப்புதலுக்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் பதிவு செய்யலாம்.

(ந.க.எண்.சி1/1921/2004)

**தீர்மானம் எண்.571. அலுவலக குறிப்பு ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது. பதிவு செய்யப்பட்டது.**

**பொருள் எண். 2**

கன்னியாகுமரி மாவட்டத்தில் கிளை சாலைகளிலிருந்து பிரதான சாலைக்கு வரும் இடங்களில் விபத்தை தவிர்க்கும் பொருட்டு போக்குவரத்திற்கு பாதுகாப்பாக வேகத்தடை ( Traffic Safety measures) இந்நகராட்சியில் கன்னியாகுமரி – பழைய உச்சகடை செல்லும் சாலையில் 4 இடங்களிலும் மற்றும் குளச்சல் – திருவட்டார் சாலையில் 12 இடங்களிலும் அமைப்பதற்கு மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, நாகர்கோவில் அவர்களின் கடிதம் ந.க.எண்.அ4/0018/2013 நாள் 03.01.2013–ல் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே மேற்படி சாலைகளில் வேகத்தடை அமைப்பதற்கு, வேகத்தடை ஒன்றிற்கு ரூ.4,900/– வீதம் 16 வேகத்தடைகள் அமைப்பதற்கான மதிப்பீட்டுத் தொகை ரூ. 7,84,000/– க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ1/285/2013)

**தீர்மானம் எண்.572. அலுவலக குறிப்பு ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 3**

இந்நகராட்சிக்குட்பட்ட கொட்டில்பாடு பகுதியில் அமைந்துள்ள புனித அல்லேசியார் ஆலய கல்லறை தோட்டம் அருகில் பொதுமக்கள் பயன்படுத்தும் வகையில் நீர்த்தேக்க தொட்டி அமைத்து குடிநீர் இணைப்பு வழங்கும் பணியினை இந்நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்வதற்கும், அதற்காக தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீட்டுத் தொகை ரூ.25,000/–க்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ1/1110/2013)

**தீர்மானம் எண்.573. அலுவலக குறிப்பு ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 4**

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர், நாகர்கோவில் அவர்களின் நடவடிக்கைகள் செ.மு.எண்.அ3/158/2013(2) நாள் 17.04.2013–ன்படி, சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2012–13–ன்கீழ், ரூ.4,84,000/– மதிப்பீட்டில் இந்நகராட்சிக்குட்பட்ட கொட்டில்பாடு–1, கொட்டில்பாடு–2, செக்காலத்தெரு, களிமார், பர்னட்டிவிளை, ஆசாத்நகர், குழந்தை ஏசு நகர் மற்றும் சிங்கன்காவு அங்கன்வாடி மையங்களில் எரிவாயு இணைப்பு அமைத்து நவீனப்படுத்தும் பணிகளை மேற்கொள்வதற்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. எனவே மேற்படி

அங்கன்வாடி மையங்களில் எரிவாயு இணைப்பு அமைத்து நவீனப்படுத்தும் பணிகளை மேற்கொள்வதற்கு ரூ. 4,84,000/– க்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு மன்றத்தின் ஒப்புதலுக்காக வைக்கப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ1/1356/2013)

**தீர்மானம் எண்.574. அலுவலக குறிப்பு ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 5**

இந்நகராட்சிக்குட்பட்ட 8–வது வார்டில் மரமடி பகுதியில் அமைந்துள்ள மீனவர் ஓய்வு அறை மிகவும் மோசமானக பழுதடைந்துள்ளதால், அதில் பராமரிப்பு பணிகள் மேற்கொள்வதற்கும், தரையில் டைல்ஸ் பதிப்பதற்கும் ஆகும் மதிப்பீட்டு தொகை ரூ. 1,20,000/–க்கும், மேற்படி பணியை இந்நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்வதற்கும், மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ1/1357/2013)

**தீர்மானம் எண்.575. அலுவலக குறிப்பு ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 6**

இந்நகராட்சி குடிநீர் பிரிவு பணிகளை மேற்கொள்வதற்கு போதிய பணியாளர்கள் இல்லாத காரணத்தால் ஒப்பந்ததாரர் மூலம் தேவையான பணியாளர்களை கொண்டு பணிகள் மேற்கொள்வதற்கு 07.05.2013–ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் குறித்த விவரம் பின்வருமாறு :

| | | |
|---|---|---|
| 1. | திரு.T.ஜாண் ரெக்ஸ்லின் ஜோஸ், ஒப்பந்தத்தாரர் | மதிப்பீட்டு விகிதம். |
| 2. | திரு.C.தேவ கரிம் சேம், ஒப்பந்தத்தாரர் | மதிப்பீட்டை விட 0.03% கூடுதல். |

மேற்காணும் ஒப்பந்தப்புள்ளிகளில், மதிப்பீட்டு விகிதத்தில் ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.T.ஜாண் ரெக்ஸ்லின் ஜோஸ், ஒப்பந்தத்தாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு :** மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ1/460/2013)

**தீர்மானம் எண்.576. அலுவலக குறிப்பு ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 7**

ஒருங்கிணைந்த நகர்புற வளர்ச்சி குழுமம் 2011–12–ன்கீழ், இந்நகராட்சிக்குட்பட்ட அண்ணாசிலை முதல் பெரியப்பள்ளி வரை சாலையின் இருபக்கமும் ரூ.33.00 இலட்சம் மதிப்பீட்டில் வடிகால் ஓடை மற்றும் நடைபாதை அமைக்கும் பணிக்கு கடந்த 08.05.2012–ல் திரு.ஆர்.ஜாண் ஒப்பந்ததாரருக்கு பணி உத்தரவு வழங்கப்பட்டது. மேற்படி பணியானது ஒப்பந்த விதிகளின்படி 07.08.2012–ல் முடிக்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால் உரிய காலத்திற்கு பணி முடிக்கப்படாததால் பணியினை முடிக்க கோரி பலமுறை கடிதங்கள் வாயிலாகவும், தொலைபேசி வாயிலாகவும், நேரிலும் அறிவுறுத்தப்பட்டது. ஆனால் பணிகளில் போதிய முன்னேற்றமில்லாமல் காணப்பட்டது. எனவே ஒப்பந்த விதிகளின்படி நடவடிக்கை மேற்கொள்வதற்காக உரிய கால அவகாசம் அளித்து கடிதங்கள் அனுப்பப்பட்ட பின்னரும் பணியானது முடிக்கப்படாமல் உள்ளதோடு, அது தொடர்பாக எவ்வித தகவலும் ஒப்பந்ததாரரிடமிருந்து பெறப்படவில்லை. மேலும் திட்டப் பணிகள் உரிய காலத்திற்குள் முடிக்கப்படாமல் உள்ளதால் உயர் அதிகாரிகள் மற்றும் பொதுமக்கள் மத்தியில் இந்நகராட்சிக்கு மிகுந்த அவப்பெயர் ஏற்பட்டுள்ளது. எனவே பணியின் முக்கியத்துவம் கருதியும், திட்டப் பணிகளை உடனடியாக முடிக்க வேண்டியதன் அவசியத்தை கருத்தில் கொண்டும் மேற்படி

பணிக்காக திரு.ஆர்.ஜாண், ஒப்பந்ததாரருக்கு வழங்கப்பட்ட பணி உத்தரவை ரத்து செய்துவிட்டு மேற்படி பணியினை துறை மூலம் செய்து முடிக்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அ.குறிப்பு :</u>** மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ1/7057/2011)

**தீர்மானம் எண்.577. அலுவலக குறிப்பு ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 8**

ஒருங்கிணைந்த நகர்புற வளர்ச்சி குழுமம் 2011–12–திட்டத்தின்கீழ், இந்நகராட்சி திடக்கழிவு மேலாண்மை பணிகளுக்கு தேவையான மின்கலத்தில் இயங்கும் சிறிய டிப்பர் வாகனம் (Battery operated CCT Cargo Tipper) 2 எண்ணங்களை வினியோகம் செய்வதற்கு D'Engineeringss, Coimbatore நிறுவனத்திற்கு கடந்த 08.02.2013–ல் பணி உத்தரவு வழங்கப்பட்டது. அதன் அடிப்படையில் கடந்த 27.04.2013–ல் மேற்படி நிறுவனத்தால் மேற்படி வாகனத்தின் மாதிரியாக முன்னோட்டத்திற்காக ஒரு வாகனம் அனுப்பப்பட்டு, அதனை இயக்கி பார்த்து அது தொடர்பான விவரங்களை அனுப்ப தெரிவிக்கப்பட்டது. மேற்படி வாகனம் ஆய்வு செய்யப்பட்டதில் அது ஒப்பந்த நமூனாவில் கொடுக்கப்பட்ட குறிப்புகளின்படி இல்லாதது தெரிய வந்துள்ளது. எனவே மேற்படி வாகனத்தை திருப்பி எடுத்து செல்லவும், ஒப்பந்த நமூனாவில் கொடுக்கப்பட்ட குறிப்புகளின் (Tender Schedule specifications) –படி வாகனத்தை வடிவமைத்து வினியோக செய்ய குறிப்பிட்ட கால அவகாசம் அளித்து கடிதம் அனுப்பப்பட்டது. இது தொடர்பாக மேற்படி நிறுவனத்திற்கு தொலைபேசி வாயிலாக தகவல்கள் தெரிவிக்கப்பட்ட பின்னரும் எவ்வித தகவலும் இதுநாள் வரையிலும் பெறப்படவில்லை. எனவே திட்டப் பணிகளை உரிய கால கெடுவிற்குள் முடிக்க வேண்டியதன் அவசியத்தை கருத்தில் கொண்டு ஒப்பந்த விதிகளின்படி மேற்படி D'Engineeringss, Coimbatore நிறுவனத்திற்கு வழங்கப்பட்டுள்ள பணி உத்தரவை ரத்து செய்யவும், மறு ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அ.குறிப்பு :</u>** மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ1/7057/2011)

**தீர்மானம் எண்.578. அலுவலக குறிப்பு ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 9**

இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 13–ல் காணிக்கை மாதா திருத்தலம் அருகில் உள்ள துறைமுகத்தெரு–2 அங்கன்வாடி மையம் எண்.86–ன் மேற்கூரை, சுவர், தரை ஆகியவை மிகவும் மோசமாக பழுதடைந்துள்ளது. எனவே குழந்தைகள் நலன் கருதி மேற்படி அங்கன்வாடி மையத்தில் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளவும், குடிநீர் வசதி மற்றும் கழிப்பிட வசதிகள் மேற்கொள்வதற்கும் ஆகும் மதிப்பீட்டுத் தொகை ரூ.2,00,000/–க்கும், மேற்படி பணியினை இந்நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்வதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அ.குறிப்பு :</u>** மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ1/1705/2013)

**தீர்மானம் எண்.579. அலுவலக குறிப்பு ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 10**

இந்நகராட்சியில் ஒருங்கிணைந்த நகர்புற வளர்ச்சி குழுமம் மற்றும் ஏனைய திட்டங்களின்கீழ் நடைபெற்று வரும் பணிகளின் முன்னேற்ற அறிக்கை குறித்து விவர அட்டவணை (Board) தயார் செய்து ஆணையர் அறையில் வைப்பதற்கு நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் கடிதத்தின்படி, நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருநெல்வேலி அவர்களின் கடிதம் ந.க.எண்.53/2010/ஆ1 நாள் 01.02.2013–ல் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே திட்டப் பணிகளின் முன்னேற்ற அறிக்கை குறித்த விபர அட்டவணைக்காக 230 x 122 cm அளவுள்ள Nylam Sheet Board தயார் செய்வதற்கான மதிப்பீட்டுத் தொகை ரூ. 4750/–க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அ.குறிப்பு :</u>** மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ1/1706/2013)

**தீர்மானம் எண்.580. அலுவலக குறிப்பு ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 11**

இந்நகராட்சிக்குட்பட்ட இந்திரா காலனியில் அமைந்துள்ள குப்பை கொட்டுமிடத்தில் நிரம்பியுள்ள குப்பைகளை ஜே.சி.பி. மூலம் அகற்றுவதற்கான உத்தேச செலவுத் தொகை ரூ.2,10,000/—க்கு இந்நகர்மன்ற தீர்மானம் எண்.515 நாள் 25.03.2013—ன்படி அனுமதி வழங்கியுள்ளது. அதன்பேரில் 09.05.2013—ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்காணும் ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| 1. | M.H. Earth Works | மெட்ரிக் டன் **1**—க்கு ரூ.**344**/— (344 x 580 ) ரூ. 199520/— |
| 2. | கிருபை எர்த் ஒர்க்ஸ் | மெட்ரிக் டன் **1**—க்கு ரூ.**350**/— (350 x 580 ) ரூ. 2,03,000/— ) |

மேற்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள M.H. Earth Works என்பவரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று நகர்மன்ற தலைவரின் முன்அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியமைக்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : பொது சுகாதாரப் பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவரின் முன்அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

(ந.க.எண்.எச்1/342/2012)

**தீர்மானம் எண்.581. அலுவலக குறிப்பு ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 12**

இந்நகராட்சிக்குட்பட்ட இலப்பவிளை, ஆசாரிமார் கீழத்தெரு, முகைதீன்பள்ளி தெரு ஆகியவற்றில் அமைக்கப்பட்டுள்ள ஆழ்துளை கிணறு மற்றும் மினி பவர் பம்பு பழுதடைந்து உள்ளது. தற்போது நிலவி வரும் வறட்சியின் காரணமாகவும், குடிநீரின் அவசர அவசியம் கருதியும் மேற்படி கூறப்பட்டுள்ள மூன்று ஆழ்துளை கிணறுகளையும் Flushing செய்தும், Wiring மற்றும் மோட்டார் பழுது சரி செய்தும், சின்டெக்ஸ் டாங்க் அமைத்தும் பொது மக்களுக்கு சீரான முறையில் குடிநீர் வழங்க தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.1,00,000/— க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>**அ.குறிப்பு :**</u> மேற்படி_ பணியை தற்சமயம் பொது நிதியிலிருந்து செலவு செய்யவும், திட்ட நிதி பெறப்பட்டவுடன் ஈடு செய்து கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ2/1708/2013)

**தீர்மானம் எண்.582. அலுவலக குறிப்பு ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 13**

இந்நகராட்சியில் உள்ள Pump Room-களில் உள்ள Power Capacitor அனைத்தும் பழுதடைந்துள்ளது. எனவே பழுதடைந்த Power Capacitor — களை மாற்றி புதிய Capacitor- கள் பொருத்துவதற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ. 25,000/— க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>**அ.குறிப்பு :**</u> மேற்படி_ பணியை தற்சமயம் பொது நிதியிலிருந்து செலவு செய்யவும், திட்ட நிதி பெறப்பட்டவுடன் ஈடு செய்து கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ2/1709/2013)

**தீர்மானம் எண்.583. அலுவலக குறிப்பு ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண்.14**

இந்நகராட்சிக்குட்பட்ட பர்னட்டிவிளையில் உள்ள ஆழ்துளை கிணறு எண்.9—ல் உள்ள மோட்டார் பழுதடைந்துள்ளதால் அப்பகுதி மக்களுக்கு குடிநீர் சீராக வழங்க முடியவில்லை. தற்போது Spare motor இருப்பில் இல்லாத காரணத்தால் புதியதாக மோட்டார் வாங்கி மேற்படி ஆழ்துளை கிணற்றில் இறக்குவதற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ. 65,000/—க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>ஆ.குறிப்பு :</u>** மேற்படி_ பணியை தற்சமயம் பொது நிதியிலிருந்து செலவு செய்யவும், திட்ட நிதி பெறப்பட்டவுடன் ஈடு செய்து கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ2/1710/2013)

**தீர்மானம் எண்.584. அலுவலக குறிப்பு ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண்.15**

இந்நகராட்சிக்குட்பட்ட வெள்ளியாகுளம் மற்றும் சாஸ்தான்கரை பகுதிகளில் தற்போது நிலவி வரும் வறட்சியின் காரணமாக குடிநீர் சீராக வழங்க முடியவில்லை. எனவே அப்பகுதி பொதுமக்களிடமிருந்து புகார்கள் வரப்பட்டதன்படி, குடிநீர் லாறி மூலம் வழங்கப்பட்டும், அப்பகுதியில் உள்ள அனைத்து மக்களுக்கும் சீராக வழங்க முடியவில்லை. எனவே வறட்சியின் காரணமாக வெள்ளியாகுளம் அருகில் நகராட்சிக்கு சொந்தமான கிணற்றிற்கு அருகில் புதியதாக ஒரு ஆழ்துளை கிணறு மற்றும் நீர்த்தேக்க தொட்டி ( Mini Power Pump) அமைத்து ஆழ்துளை கிணற்றிலிருந்து நீர்த்தேக்கத் தொட்டிக்கு குடிநீர் ஏற்றப்பட்டு வெள்ளியாகுளம் மற்றும் சாஸ்தான்கரை பகுதி மக்களுக்கு வினியோகம் செய்ய தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ. 2,00,000/— க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>ஆ.குறிப்பு :</u>** மேற்படி_ பணியை தற்சமயம் பொது நிதியிலிருந்து செலவு செய்யவும், திட்ட நிதி பெறப்பட்டவுடன் ஈடு செய்து கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ2/1707/2013)

**தீர்மானம் எண்.585. அலுவலக குறிப்பு ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண்.16**

**குளச்சல் நகர்மன்ற துணைத்தலைவர் மற்றும் 5 வது வார்டு உறுப்பினர் திரு.ஜேசுராஜன், 6 வது வார்டு உறுப்பினர் திருமதி அமலபுஷ்பம், 7 வது வார்டு உறுப்பினர் திரு.பென்சிகர் ஆகியோர் கொண்டு வரும் தீர்மானம்.**

இந்நகராட்சிக்குட்பட்ட கொட்டில்பாடு பகுதியில் இயங்கி வந்த ரேசன் கடை K.V.T.C.M.S CC003 ரேசன் கடையானது கடந்த சுனாமி பேரழிவிற்கு பின்னர் இடவசதியின்மையால் கல்லுக்கூட்டம் பேரூராட்சிக்குட்பட்ட பாக்கியபுரம் பகுதிக்கு மாற்றம் செய்யப்பட்டு இதுநாள் வரை அப்பகுதியிலேயே செயல்பட்டு வருவதால், அக்கடையில் ரேசன் பொருள் வாங்கி வரும் மக்கள் மிகுந்த சிரமத்திற்குள்ளாகி வருகின்றனர். தற்போது கொட்டில்பாடு கோவில் அருகாமையில் ரேசன் கடை கட்டுவதற்கு தேவையான இடவசதியுள்ளதால் பொதுமக்கள் நலனை கருத்தில் கொண்டு மேற்படி இடத்தில் ரேசன் கடை கட்டுவதற்கு மாவட்ட நிர்வாகத்தை கேட்டுக் கொள்ள மன்றம் தீர்மானிக்கலாம்.

**தீர்மானம் எண்.586. ஒத்திவைக்கப்பட்டது.**

(ஒம்) அ.நசீர்,
நகர்மன்றத் தலைவர்
குளச்சல் நகராட்சி

(உண்மை நகல்)

ஆணையர்(பொ)
குளச்சல் நகராட்சி

# குளச்சல் நகராட்சி

குளச்சல் நகராட்சி மன்றத்தின் அவசரக்கூட்டம் 2013 மே திங்கள் 30.05.2013–ம் நாள் வியாழக்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு நகர்மன்ற கூட்ட அரங்கில் வைத்து நடைபெற்றது.

முன்னிலை:
நகர்மன்ற தலைவர்
குளச்சல் நகர்மன்றம்.

**பொருள் எண்.1**

இந்நகராட்சிக்கு 2013–14 –ம் ஆண்டுக்கு அலுவலக பயன்பாட்டிற்கு தேவையான எழுது பொருட்கள், படிவங்கள், பதிவேடுகள் மற்றும் கணனி பிரிவிற்கு தேவையான பொருட்கள் ஆகியவற்றை வாங்குவதற்கான உத்தேச செலவு ரூ.5,00,000/–க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அ.குறிப்பு :</u> மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.எச்1/936/2010)

**தீர்மானம் எண்.587. அலுவலக குறிப்பு ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண்.2**

இந்நகராட்சிக்குட்பட்ட பெருந்தலைவர் காமராஜர் பேருந்து நிலையத்தில் அமைந்துள்ள கடை எண். 1, 2, 5, 9, 11, 12, 14, 16, 22, 26, 33, 34 ஆகிய கடைகளுக்கு 31.03.2013–ல் உரிமம் முடிவடைந்துள்ளதால், மேலும் மூன்றாண்டு நீட்டிப்பு செய்யவும், வாடகை தொகையில் 15% உயர்வு செய்யவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண். | கடை எண். | வரிவிதிப்பு எண். | உரிமைதாரர் பெயர் | தற்போதைய மாத வாடகை | 15% உயர்வு செய்யப்பட்ட தொகை |
|---|---|---|---|---|---|
| 1 | 1 | 2005001 | திரு.வி.மைதீன்கான் | 2010/– | 2312/– |
| 2 | 2 | 2005002 | திரு.வி.மைதீன்கான் | 1876/– | 2157/– |
| 3 | 5 | 2005005 | திரு.எம்.ஜே.தார்ச்சீஸ் | 1474/– | 1695/– |
| 4 | 9 | 2005009 | எ.எம். சுகைபு | 1875/– | 2156/– |
| 5 | 11 | 2005011 | திரு. மாஹீன் | 1150/– | 1323/– |
| 6 | 12 | 2005012 | திரு.எஸ்.முகம்மது காசீம் | 998/– | 1148/– |
| 7 | 14 | 2005014 | திரு.எம். ஐயப்பன் | 998/– | 1148/– |
| 8 | 16 | 2005016 | திரு.சி. முருகன் | 620/– | 713/– |
| 9 | 22 | 2005022 | திரு.எ.எம்.பகறுதீன் | 585/– | 673/– |
| 10 | 26 | 2005026 | திரு.எஸ்.முருகன் | 585/– | 673/– |
| 11 | 33 | 2006006 | ஸ்டார் குழு | 397/– | 457/– |
| 12 | 34 | 2007006 | சங்கு புஷ்பம் குழு | 397/– | 457/– |

**அ.குறிப்பு :** மேற்படி வாடகைதாரர்களின் உரிமம் 31.03.2013–வுடன் முடிவடைந்துள்ளதால் மேலும் மூன்றாண்டுகள் நீட்டிப்பு செய்தும், 15% வரியினை உயர்வு செய்தும் உரிமம் வழங்கலாம்.

(ந.க.எண்.எச்1/2035/2011)

**தீர்மானம் எண்.588. அலுவலக குறிப்பு ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது. உரிமம் வழங்கப்பட்டது.**

**பொருள் எண். 3**

இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.10—ல் க.எண்.10/67—ன் முன்பாக ஏ.வி.எம். கால்வாயின் குறுக்கே கட்டப்பட்டுள்ள சிறுபாலம் பழுதடைந்து பொதுமக்கள் பயன்படுத்த இயலாத நிலையில் உள்ளது. மேலும் மேற்படி பாலத்தின் அருகில் உள்ள தெரு, மண் தரையாக உள்ளதால் மழை காலங்களில் தண்ணீர் தேங்கி பொதுமக்களுக்கு இடையூறு ஏற்பட்டு வருகிறது. எனவே பொதுமக்கள் நலனை கருத்தில் கொண்டு பழுதடைந்துள்ள சிறு பாலத்தை சரி செய்யவும், மேற்படி தெருவில் பேவர் பிளாக் சாலை அமைக்கும் பணியினை இந்நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும், அதற்கான மதிப்பீட்டுத் தொகை ரூ.1,20,000/—க்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அ.குறிப்பு :</u> மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ1/2142/2012)

**தீர்மானம் எண்.589. அலுவலக குறிப்பு ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 4**

இந்நகராட்சிக்குட்பட்ட வெள்ளிப்பிள்ளையார் கோவில், சீம்பிளிவிளை, பர்னட்டிவிளை மற்றும் பாலத்தன்கரை ஆகிய பகுதிகளில் உள்ள 20 எண்ணம் ஆழ்துளை கிணறுகளிலிருந்து சராசரியாக நாள் ஒன்றுக்கு 18 மணி நேரம் நீர்மூழ்கி மோட்டார்களின் மூலம் குடிநீர் பெறப்பட்டு வினியோகம் செய்யப்படுகிறது.

மேலும் 20 ஆழ்துளை கிணறுகளிலிருந்து 10 எச்.பி. 19 எண்ணம் மூலம் நாள் ஒன்றுக்கு சராசரியாக 51,30,000 லட்சம் லிட்டர் தண்ணீர் பெறப்படுகிறது. 5 எச்.பி. 1 எண்ணம் மூலம் நாள் ஒன்றுக்கு 1,00,000 லட்சம் லிட்டர் தண்ணீர் பெறப்படுகிறது. மேலும் மொத்தமாக 52,30,000 லட்சம் லிட்டர் தண்ணீர் நாள் ஒன்றுக்கு 2 முறைக்கு மேல் 10 எண்ணம் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியில் (மொத்த கொள்ளளவு 20.20 லட்சம் லிட்டர்) ஏற்றப்பட்டு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. இதனால் நாள் ஒன்றுக்கு ஒவ்வொரு குடிநீர் குழாய் இணைப்புக்கும் சராசரியாக 1200 லிட்டர் வீதம் குடிநீர் விநியோகம் பெறும் வாய்ப்புள்ளது.

ஆனால் தற்போது தாழ்வான பகுதிகளில் உள்ள வீடுகளில் உள்ளவர்கள் குடிநீரை தேவையான அளவுக்கு மேல் அதிகமாக விரையம் செய்யும் காரணத்தினால் மேட்டுப் பகுதியில் உள்ள குடிநீர் குழாய் இணைப்புக்கு சீராக தண்ணீர் கிடைக்கவில்லை.

எனவே அனைத்து மக்களுக்கும் சீராக குடிநீர் விநியோகம் செய்யும் வகையில் அனைத்து குடிநீர் குழாய் இணைப்புகளிலும் Flow control valve மற்றும் Water meter பொருத்தி உபயோகப்படுத்தும் குடிநீர் அளவுகளுக்கு ஏற்ப கட்டணம் வசூல் செய்யும் வகையிலும், அளவுக்கு அதிகமாக குடிநீர் உபயோகிக்கும் இணைப்புகளுக்கும் அளவுமானிகளின் அளவுப்படி கூடுதல் கட்டணம் வசூல் செய்யவும், மேலும் கீழ்கண்டவாறு கட்டணம் நிர்ணயம் செய்யவும், மேலும் Flow control valve மற்றும் Water meter பொருத்தாத குடிநீர் குழாய் இணைப்புகளை கண்டறிந்து நடவடிக்கை மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| | |
|---|---|
| மாதம் ஒன்றுக்கு | 15,000 லிட்டர் வரை தற்போதைய கட்டணம் ( 50 + 2 ) ரூபாய் |

<u>அ.குறிப்பு :</u> மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ2/4337/2012)

**தீர்மானம் எண்.590. அலுவலக குறிப்பு ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 5**

இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.13—ல் காணிக்கை மாதா ஐஸ் பிளான்ட்—க்கு எதிரில் பொது கழிப்பிடத்தின் அருகில் உள்ள தெருவில் கழிவுநீர் வெளியே செல்ல முடியாமல் தேங்கி நிற்பதால், பொது சுகாதாரக் கேடு ஏற்பட்டு பொது மக்களுக்கு நோய்கள் பரவும் சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. எனவே பொது மக்கள் நலன் கருதி, மேற்படி தெருவில் வடிகால் ஓடை மற்றும் பேவர் பிளாக் சாலை அமைப்பதற்கு ஆகும் மதிப்பீட்டுத் தொகை ரூ. 4,00,000/— க்கும், மேற்படி பணியினை இந்நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்வதற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அ.குறிப்பு :</u>** மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ1/1746/2013)

**தீர்மானம் எண்.591. அலுவலக குறிப்பு ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 6**

இந்நகராட்சிக்கு சொந்தமான காமராஜர் பேருந்து நிலையத்தின் உள்பக்கம் பயணிகள் இருக்கை அமைத்து பராமரிக்கவும், குடிநீர் வசதி செய்யவும், பேருந்து கால அட்டவணை எழுதி பராமரிக்கவும், கண்காணிப்பு கேமரா பொருத்தி, நகராட்சி அலுவலகம், குளச்சல் காவல் நிலையம் மற்றும் மாவட்ட காவல் துறைகள் கண்காணிப்பாளர் அலுவலகங்கள் மூன்று இடங்களில் இருந்து கண்காணிக்கும் வகையில் இணைப்பு வழங்கவும், விளக்கு வசதி, குப்பைக் கூடை வசதிகள் செய்து தர இதற்கு ஈடாக பயணிகள் நிற்கும் பகுதியில் அமைந்துள்ள தூண்களிலும், சுற்றுச் சுவர்களிலும் விழிப்புணர்வு வாசகங்களுடன் பொதுமக்களுக்கு இடையூறு இல்லாத வகையில் விளம்பரம் செய்வதற்கும் அனுமதி வழங்க கோரி 3 நிறுவனங்களிடமிருந்து அனுமதி கேட்டு கடிதம் பெறப்பட்டுள்ளது. எனவே தகுதிவாய்ந்த நிறுவனம் மூலம் மேற்படி பணிகளை மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அ.குறிப்பு :</u>** மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். tpi/1403/2013)

**தீர்மானம் எண்.592. அலுவலக குறிப்பு ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 7**

குளச்சல் நகராட்சிக்குட்பட்ட 4—வது வார்டில் கீழத்தெருவில் உள்ள கோயிலுக்கு (கு.கு.இ. வரிவிதிப்பு எண். 4693) நகராட்சி வாயிலாக குடிநீர் குழாய் இணைப்பு வழங்கப்பட்டது. தற்போது தண்ணீர் பிடிக்காத காரணத்தாலும், தண்ணீர் தேவையில்லாததாலும் மேற்படி குடிநீர் குழாய் இணைப்பை நிரந்தரமாக துண்டிப்பு செய்யுமாறு மேற்படி கோயிலின் தலைவர் கோரியுள்ளார். எனவே மேற்படி குடிநீர் குழாய் இணைப்பை துண்டிப்பு செய்ய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அ.குறிப்பு :</u>** மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ2/957/2013)

**தீர்மானம் எண்.593. அலுவலக குறிப்பு ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

(ஒம்) அ.நசீர்,
நகர்மன்றத் தலைவர்
குளச்சல் நகராட்சி

(உண்மை நகல்)

ஆணையர்(பொ)
குளச்சல் நகராட்சி